Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 02 வியாழக்கிழமை (18-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 280

**முச்சந்தி முரளி**



அப்ப நல்லூர் மீண்டும் போர்க்களமாகுது போல...!

## இலங்கை ஒரே நாடு என்ற அந்தஸ்து பேண வேண்டும்

### சிங்கள ஆணைக்குழு இடைக்கால அறிக்கை

கொழும்பு, செப். 18

''அதிகாரப் பரவலாக்கல் அல்லது பன்முகப்படுத்தல் என்ற வழிமுறைகள் அமுல் செய்யப்படும் போது இலங்கை ஒரே நாடு என்ற அந்தஸ்து பேணப்பட வேண்டும்.''

இப்படிச் சிங்கள ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சட்டமும், ஒழுங்கும் பொலீஸ் அதிகாரம், அரச காணிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றில் அரசாங்கம் முழுக் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அந்த ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

இவற்றுடன் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியவற்றில் தொல்பொருள் முக்கியத்துவம்வாய்ந்த இடங்கள், நீதிநிர்வாகப் பகுதிகள் என்பனவும் ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் இலங்கையைச் சாதாரண தர சமஷ்டி ஆட்சிக்கு

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இலக்கம் இல்லாத வானில் சென்ற 8 பேர் கைது!

கொழும்பு, செப். 18

இலக்கத்தகடு இல்லாத வானில் சென்ற இளைஞர் எட்டுப்பேரை அளவ்வை பொலீஸார் கைது செய்தனர்.

இந்த இளைஞர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலீஸார் இவர்களை துல்கிரிய நீதிவான் பந்துல அத்தப்பத்து முன் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர்களை எதிர் வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-3-6)

# காணாமற்போனோரின் பெற்றோர் நல்லூரில் நாளை உண்ணாவிரதம்

## உரிய பலன் கிடையாவிடில் செயலகம் முன் மறியற்போர்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 18

**யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு காணாமற் போனதாகக் கருதப்படுபவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் நாளை வெள்ளிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்த முடிவு செய்துள்ளனர்.**

குடாநாட்டில் பல்வேறு சமயங்களில் கைது செய்யப்பட்டு இது வரை தகவல் தெரியாதுள்ளவர்களின் இருப்பிடங்களைத் தெரிவிக்கக் கோரியும்—

கைதானவர்கள் தமது உறவினர்களுடன் தொடர்பை ஏற்படுத்த உதவுமாறு கோரியும்—

இந்த விடயங்கள் தொடர்பாக பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதியைக் கோரியும்—

இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படுகிறது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலை சந்தை விவகாரம் நேற்றைய மாநாட்டில் சமரசம்

### பொலீஸை வாபஸ் பெற இணக்கம்

கொழும்பு, செப். 18

திருகோணமலை புதிய சந்தை விவகாரம் தொடர்பாக நேற்று மாலை திருகோணமலை இராணுவ முகாமில் நடந்த உயர்மட்ட மாநாட்டில் சமுகமான தீர்வு காணப்பட்டது.

திருமலை பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் நிகால் ஜெயக்கொடி தலைமையில் நடந்த இந்தமாநாட்டில் திருமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி, அரச அதிபர் சந்திரதாஸ, மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வி. சபாபதிப்பிள்ளை ஆகியோர் உட்பட பொலீஸ், இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

''புதிய சந்தை திறப்பது திருமலை நகரில் பாதுகாப்பைக் குழப்புவதாக அமையலாம். தற்போதைய சந்தையில் வர்த்தகம் செய்யும் வியாபாரிகளால் சிக்கல் ஏற்படும். ஆகவே புதிய சந்தையைத் திறப்பதை ஒத்திவையுங்கள்'' என்று பாதுகாப்புத் தரப்பில் கோரப்பட்டது.

அதற்கு பதில் அளித்து சூரியமூர்த்தி பேசியதாவது:-

புதிய சந்தை சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஒருவருடமாக சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்டு வந்த போது பேசாது இருந்து விட்டு இப்போது சந்தை பூர்த்தியாகும் நிலையில் அதை நிறுத்துமாறு கேட்பது சரியல்ல. ஆளுநரின் அங்கீகாரத்துடன்தான்

[8 ஆம் பக்கம் பார்க்க]

# இரத்மலானை விமான நிலையத்தில் தற்கொலைத் தாக்குதலுக்கு திட்டம்

## கவசங்கள், றொக்கட்லோஞ்சர்கள் மீட்பு என அறிவிப்பு

கொழும்பு, செப். 18

இரத்மலானை விமான நிலையம் மீது பெரும் தற்கொலைத் தாக்குதல் நடத்தும் திட்டம் ஒன்றை தாம் முறியடித்து விட்டதாக பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இரத்மலானை விமானத் தளத்துக்கு அருகில், இராஜமாவத்தையில் சிங்களப் பெண் ஒருவரின் வீட்டை நேற்று அதிகாலை சுற்றி வளைத்த பொலீஸார் இந்த வீட்டில் இருந்து தற்கொலைக் குண்டுதாரிகள் அணியும் 5 கவசங்கள், இரண்டு றொக்கட் லோஞ்சர்கள், அதற்குரிய 9 குண்டுகள், இரண்டு ரி 56 ரக துப்பாக்கிகள், 3 ஆயிரம் நடுத்தர ரவைகள் சில, சயனைட் வில்லைகள் ஆகியவற்றைக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியில் கைதான மாணவர் அ,புரத்தில் விடுதலை

### பிணை எடுக்கச் சென்றோரும் கைது

வவுனியா, செப். 18

நெடுங்கேணிப் பகுதியில் வீடுபார்க்கச் சென்ற சமயம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்த நெடுங்கேணி மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவரும் நேற்று அனுராதபுரம் நீதிவானால் விடுதலை செய்யப்பட்டனர்.

நெடுங்கேணியில் கடந்த 7 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவ்விரு மாணவர்களும் மேல் விசாரணைக்காக கெப்பிட்டிக் கொலவ பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்பு பகுதி நோக்கி ஷெல் வீச்சு

வவுனியா, செப். 18

மன்னார் — உயிலங்குளம் தடை முகாம் பகுதியில் இருந்து நேற்று மக்கள் குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ''புலிகளின்குரல்'' வானொலி தெரிவித்தது.

சேதவிபரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (இ164-3)

## தரை வழிப்பாதை விரைவில் திறக்கப்படும்

### ஜனாதிபதி மலேசியாவில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

''யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரை வழிப்பாதை விரைவில் திறக்கப்படும்''.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோலாலம்பூரில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்
# மரதன் ஓட்டப் போட்டி

எதிர்வரும் ஐப்பசி 03 சர்வதேச நல்லொழுக்க தினத்தினை முன்னிட்டு 8 மைல்கள் கொண்ட மரதன் ஓட்டப்போட்டியினை நடத்துவதற்கு வ. பி. நல்லொழுக்க சம்மேளனம் விரும்பியுள்ளது. இதில் பங்கு பற்றும் வீரர்களை சம்மேளனச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். போட்டி எதிர்வரும் **21—09—97** ஞாயிறு காலை 8.00 மணிக்கு சித்தன்கேணிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும்.

சிவன்கோயில் வீதி,
சித்தன் கேணி.

செயலாளர்

(47432)

---

உ

# சந்திக்கவும்

ஏழாலை மகா வித்தியாலய எனது சக மாணவனும்

**கீதாஞ்சலி V. K. நல்லையாவின்**

மருகனுமாகிய

**சின்னமணி (K. N. கணபதிப்பிள்ளை)**

அவர்களை **22 - 09 - 97**க்கு முன் சுன்னாகம் முத்துக் கிருஷ்ணர் வீதியில் உள்ள எனது இல்லத்தில் தயவு செய்து வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

**ந. சுப்பிரமணியம்**
[ ஏழாலை மணியன் ]

(சி/1582)

---

**யாழ்ப்பாண**
**மாநகராட்சி மன்ற**

## சைவசமய விவகாரக் குழு
நடத்தும்
# சமய அறிவுப் போட்டி-1997

கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு வழமைபோல் இவ்வருடமும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான **04** பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டியை (எழுத்துப் பரீட்சை) வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு நிலையங்களிலும் எதிர்வரும் **04 - 10 - 97** ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பாடசாலை அதிபரிடமிருந்தோ அன்றேல் நல்லூரில் உள்ள மாநகர சபை அலுவலகத்திலிருந்தோ தேவையான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களின் பாடத்திட்டத்துக்கு அமைவான மேற்படி போட்டியில் தவறாது பங்கு பற்றி சமய அறிவினைப் பெருக்கிக்கொள்ளுமாறு அனைத்து மாணவ, மாணவியரையும் அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ். மாநகராட்சி மன்றம்.**

1997-09-17

(சி/1586)

---

# மரண அறிவித்தல்

## திருமதி பாலசிங்கம் இராசமலர்

காரைநகர் கணக்கணார்கண்டியைச் சேர்ந்த திருமதி பாலசிங்கம் இராசமலர் அவர்கள் 15-09-97 அன்று காலமானார்.

அன்னார் செ. பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற S. R. பொன்னம்பலம், பொ. வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற க. செல்லத்துரை, செ. நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், பா. சிறீஸ்கந்தராசா, பா. சிறீரஞ்சனி, பா.சிறீரஜனி [மாணவிகள், காரை. கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்] ஆகியோரின் பேரன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16/09/97 அன்று காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. இராசரத்தினம்
[ சகோதரன் ] [ P. R. ]

கணக்கணார்கண்டி,
காரைநகர்.

[49701]

---

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, செப். 18

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய பரிசில் நாள் விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் நா. அருட்சோதி தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினர்களாக சாவகச்சேரிக் கோட்ட கல்வி அலுவலர் இலங்கையர் கணேசனும், சிறப்பு விருந்தினர்களாக கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இ. கைலைநாதன், நா. சத்தியநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-117)

---

## எமது புதிய வெளியீடு

அருண்குமார் நடித்த

★ **கங்கா கௌரி**

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.

(49701)

---

## யூனிவேர்சல்
கந்தர்மடம்

# AL 97, 98

**குறியீட்டு அளவை முறை**

(புள்ளி விவரவியலிலிருந்து அளவையியலுக்கு மாறும் மாணவர்களுக்கானது.)

ஆசிரியர்:
திரு. V. யுகபாலசிங்கம்
B. A HONS
M. A (Dip. in - Ed.)

**ஆரம்பம்:**
**18 - 09 - 97**
வியாழன் 4-30 மணி

(49702)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

**வெளிவாரிப் பரீட்சைகள் 1995**

1. இரண்டாம் ஆண்டு பகுதி 1 — சிறப்புக் கலைமாணி / பொதுக் கலைமாணி / வர்த்தக மாணித் தேர்வுகள் 22-09-1997இல் ஆரம்பமாகும்.
2. மூன்றாம் ஆண்டு பகுதி 11 — சிறப்புக் கலைமாணி / பொதுக் கலைமாணி / வர்த்தக மாணித் தேர்வுகள் 13-10-1997இல் ஆரம்பமாகும்.
3. நான்காம் ஆண்டு பகுதி 111 — சிறப்புக் கலைமாணி / வர்த்தக மாணித் தேர்வுகள் 27-10-1997இல் ஆரம்பமாகும்.

இப்பரீட்சைக்கான நேரசூசியையும், அனுமதி அட்டையினையும் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

**- பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/1584)

---

# கல்வி, கலைத்துறைகள் வளர வர்த்தகர் வளங்கள் அவசியம்

## கலை விழாவில் துணைவேந்தர் உரை

நல்லூர், செப். 18

கல்வி—கலை உலகுக்கு எப்போதும் கைத்தொழில், வர்த்தகப் பிரமுகர்களின் உறவு அவசியமாகிறது. இவர்களின் வளங்கள் கல்வி, கலை என்பவற்றுக்கு சிதறி அவை வளர்ச்சி அடைவது நாட்டின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கு வழி வகுக்கும்''

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். கல்வித்திணைக்கள வலயம்-1 இன் நலன்புரிக்கழகத்தின் கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இக் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கழகத்தலைவர் எஸ். மற்றாஸ்மெயில் தலைமையில் விழா நடைபெற்றது.

யாழ்.கல்வித்திணைக்களம், வலயம் I இன் கல்விப் பணிப்பாளரும் நலன்புரீக்கழக போசகருமான சு. இரத்தினராசா சிறப்புரை நிகழ்த்தினார். யாழ். திருமறைக்கலாமன்றத்தின் ''சத்தியவான் சாவித்திரி'' என்ற இசை நாடகமும் ஏனைய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (இ-5-103)

## 'ஓசன் சக்ஸஸ்' புறப்பட்டது

நெல்லியடி, செப். 18

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடித்த 'ஓசன் சக்ஸஸ்' கப்பல் நேற்று முன்தினம் காலை கொழும்புக்குப் புறப்பட்டது.

இக்கப்பலில் வெங்காயம், புகையிலை, புழுக்கொடியல், கடலட்டை, சங்கு போன்ற பொருள்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன.

---

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க விசேட பொதுக் கூட்ட
# அறிவித்தல்

காலம்: 19-09-97 வெள்ளிக்கிழமை
நேரம்: முற்பகல் 10.00 மணி
இடம்: அடைக்கல மாதா கோயில் மண்டபம்
4 ஆம் குறுக்குத் தெரு, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

விடயம்: **6ம் ஆண்டு நிறைவு விழா**

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் / செயலாளர்
**யா. மா. பே. உ. சங்கம்**

[சி/1585]

---

# 11 -ம் ஆண்டு நினைவலைகள்



**அமரர்**
## சண்முகசுந்தரக்குருக்கள் சூரியகுமார்
(முன்னாள்முகாமையாளர், ஹற்றன் நஷனல்வங்கி)

| மாதா மடியில்: | மங்கையோடு வானில்: |
|---|---|
| 20 - 11 - 1952 | 24 - 09 - 1986 |

திதி: **18 - 09 - 97**

சூரியகுமாரா சுந்தரனே - உன்
சிரித்த முகம் எங்கே?
பாரியென மனங்குளிரும் - உன்
மலர்ந்த முகம் எங்கே?
பாரியென வாழ்ந்தாய் – உன்
புனித முகம் எங்கே?
காரிகையாள் கண் கலந்தாய் - உன்
கமல முகம் எங்கே?

உன் பிரிவு தாங்காத
அம்மா, அண்ணா குடும்பத்தினர்.

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (47433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் காட்டுத் தீயினால் இந்தோனேசிய தீவுகளில் சுற்றுச் சூழல் மாசடைகின்றது!

## அயல்நாடுகளிடம் மன்னிப்புக்கோருகிறார் அதிபர் சுஹார்ட்டோ

ஜகார்த்தா, செப். 18

சுமாத்திரா தீவிலும் போர்ணியோவின் ஒரு பகுதியிலும் பற்றி எரிந்து கொண்டிருக்கும் பெரும் காட்டுத் தீ காரணமாக அயற் பிரதேசங்களின் வளி மாசடைந்து வருவது குறித்து இந்தோனேசிய அதிபர் சுஹார்ட்டோ அயல் நாடுகளிடம் பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளார்.

தென் கிழக்காசிய நாடுகளின் சங்கமான ஆசியானின் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்களின் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அதிபர் சுஹார்ட்டோ தமது மன்னிப்புக் கோரிக்கையை வெளியிட்டார்.

இந்த மாபெரும் தீயை அணைப்பதற்கு சர்வதேச உதவியைக்கோருவது என ''ஆசியான்'' அமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்தக் காட்டுத் தீ காரணமாக மிக அடர்த்தியான புகை மண்டலம் அயல் நாடுகளின் வான்பரப்பில் கவியத் தொடங்கியுள்ளது.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற அயல் நாடுகளுக்கும் இந்தப் புகை மண்டலம் பரவியுள்ளது.

இந்தப் புகை மூட்டத்தை சுவாசிப்பதைத் தடுப்பதற்காக முக மூடிகளை அணிந்து கொள்ளுமாறு கோலாலம்பூர் நகர மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வயோதிபர்கள் வீடுகளை விட்டு வெளியே நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சிங்கப்பூர் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த 50 ஆண்டுகளாக இந்தோனேசியத் தீவுகளில் காணப்படும் கடும் வரட்சியே இந்தக் காட்டுத் தீ பரவக் காரணம் என இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் இது ஒரு திட்டமிட்ட சதிச் செயல் என்றும் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. (ஐ)

## சீனாவுடன் பேச தைவான் விருப்பம்

சீன நிர்வாகத்துடன் உத்தியோகபூர்வப் பேச்சுக்களை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக தைவான் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவிய பதற்ற நிலை தணிந்துவிட்டது. எனவே மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும் என்று தைவான் அரச அதிகாரி கூறியுள்ளார்.

## ஈரானில் யுத்தப் பயிற்சி

ஈரான் நாட்டு இராணுவம் யுத்தப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளது. சுமார் 2 லட்சம் படையினர் பங்குபற்றும் இந்த யுத்தப் பயிற்சி பாலைவனப் பிரதேசம் ஒன்றில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## அலுவலக மாடிக் கட்டடம் மும்பாயில் இடிந்து வீழ்ந்தது

### இடிபாடுகளிடையே பலர் சிக்கினர்

மும்பாய், செப். 18

மும்பாய் நகரில் பல மாடிகளைக் கொண்ட அலுவலகக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் பலியானார். பலர் இடிபாடுகளுக்குள் சிக்குண்டனர்.

படுகாயமடைந்த 30 பேர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். கட்டடம் இடிந்தபோது அதில் சுமார் 150 பேர் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாடிக் கட்டடத்தில்தகவல் தொடர்பு நிலையங்கள் பலவும் சர்வதேச வங்கி ஒன்றின் மும்பாய் கிளையும் இயங்கி வந்தன.

இடிபாடுகளிடையே இருந்து ஆள்களை மீட்கும் பணி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. (ஐ)

## பிரிட்டனிடம் இருந்து வாங்கிய 14 ஹெலிகளை பழைய இரும்பு விலைக்கு விற்க இந்தியா முடிவு

புதுடில்லி, செப். 18

பிரிட்டனில் இருந்து கொள்வனவு செய்த 14 ஹெலிக்கொப்ரர்களை பழைய இரும்பு விலைக்கு விற்றுவிட இந்திய அரசு தீர்மானித்திருப்பதாக லண்டனில் வெளியாகும் ''கார்டியன்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பிரிட்டன் இந்தியாவுக்கு வழங்கிய 65 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் நிதி உதவிக்கு முன் நிபந்தனையாக இந்திய அரசால் இந்த 14 ஹெலிகளும் கொள்வனவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தட்சர், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி ஆகியோரால் உருவாக்கப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் கீழ் 1987 ஆம் ஆண்டு இந்த ஹெலிக்ஹொப்ரர்கள் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டன.

இந்தக் ஹெலிகள் அனைத்தும் சுமார் 2 ஆண்டுகள் வரை மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் அவை இப்போது துருப்பிடித்த நிலையில் கைவிடப்பட்டுக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றைப் பயன்படுத்த இந்திய விமானப்படை விமானிகள் மறுப்புத் தெரிவித்து வந்தனர். அத்துடன் இந்த

### உலக அரங்கில்

ஹெலிகளில் இரண்டு விபத்துக்குள்ளான போது 9 பேர் உயிரிழந்தனர்.

பழைய இரும்பு வகைகளைக் கொள்வனவு செய்யும் பிரிட்டனைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றிடம் இந்தப் 14 ஹெலிகளையும் 9 லட்சம் பவுண் பெறுமதிக்குவிற்றுவிட இந்திய அரசு தற்போது முடிவு செய்திருப்பதாக 'கார்டியன்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## விசாகப்பட்டினத்தில் தீ விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 50 ஆகியது!

விசாகப்பட்டினம், செப். 18

ஆந்திரா மாநிலத்தில் விசாகப்பட்டினத்தில் உள்ள இந்துஸ்தான் எரிபொருள் சேமிப்புக் கிடங்கில் கடந்த ஞாயிறன்று காலை மூண்ட தீயில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது.

எண்ணெய்க் குதங்களில் பரவிய தீயினால் அருகே இருந்த கட்டடங்கள் பல இடிந்து வீழ்ந்தன. இடிபாடுகளுக்குள் சிக்கிப் பலர் உயிரிழந்துள்ளனர்.

இடிபாடுகளிடையே இருந்து சடலங்களை மீட்கும் பணியில் தீயணைப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். மேலும் சடலங்கள் மீட்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய வளாகப் பகுதி முழுவதுமே தீயில் எரிந்து நாசமாகி விட்டது. அங்கிருந்த ஆறு கட்டடங்களும் அழிந்துள்ளன. (ஐ)

## 29 சிறுவர்கள் எகிப்தில் பலி!

கெய்ரோ, செப். 18

எகிப்தில் தொழிற்சாலையில் தொழில் புரியும் சிறுவர்களை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்று நேற்று முன்தினம் மாலை ஆற்றில் கவிழ்ந்ததில் 29 சிறுவர், சிறுமியர் பலியாகினர். 54 பேர் காயமடைந்தனர். (ஐ)

## ஐ.நா.பாதுகாப்புச் சபை விடயத்தில் 3 ஆம் உலக நாடுகளை அமெரிக்கா புறக்கணிப்பு!

நியூயோர்க், செப். 18

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றுக்கு வீற்றோ அதிகாரத்தை வழங்குவதையும், நிரந்தர மற்ற 10 அங்கத்துவ நாடுகளைச் சேர்த்துக் கொள்வதையும் அமெரிக்கா விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய ஐந்து நாடுகள் மட்டுமே பாதுகாப்புச் சபையின் தற்போதைய நிரந்தர அங்கத்துவ நாடுகள் ஆகும்.

பொருளாதார, அரசியல் வலு கொண்ட ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளையும் பாதுகாப்புச் சபையில் சேர்த்துக்கொள்ள அமெரிக்கா கோரி வருகிறது.

ஆனால் இந்தியா, தென்னாபிரிக்கா, பிறேசில், ஆர்ஜென்ரீனா, எகிப்து போன்ற அபிவிருத்தியடைந்து வரும் பிரதான நாடுகள் அதிகாரத்தில் இருந்து ஒதுக்கப்படுவதாகப் பெரும்பாலான நாடுகள் கூறி வருகின்றன. (ஐ)

## பேச்சு ஆரம்பமாகிய வேளை வட அயர்லாந்தில் குண்டு வெடிப்பு!

பெல்பாஸ்ட், செப். 18

வட அயர்லாந்தில் பொலீஸ் நிலையம் ஒன்றுக்கு அருகில் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தொலைபேசி மூலம் கிடைத்த அநாமதேயத் தகவல் ஒன்றை அடுத்து பொலீஸார் குண்டை அப்புறப்படுத்த முயன்ற போது அது வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை.

ஐரிஷ் குடியரசு இராணுவம் கடந்த ஜூலை மாதத்தில் யுத்த நிறுத்தம் அறிவித்த பின்னர் வட அயர்லாந்தில் இடம் பெற்றுள்ள முதலாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

இக் குண்டு வெடிப்புக்கு எவரும் உரிமை கோரவில்லை. இதனைச் செய்தவர்கள் யார் என்பது தெளிவாகத் தெரியும் வரை அரசியற் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளாமல் ஒதுங்கி இருக்கப் போவதாக வட அயர்லாந்தின் புரொட்டஸ்தாந்து மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அல்ரா யூனியனிஸ்ட் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் அரசியல் பிரிவான 'சிம்பெய்ன்' முதன் முறையாகப் பங்குபற்றும் அரசியல் பேச்சுவார்த்தை பெல்பாஸ்ட் நகரில் ஆரம்பமாகியுள்ள சமயத்தில் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

## ''மிர்'' கலத்துடன் மோதவிருந்த அமெரிக்க விண்கலம்!

மொஸ்கோ, செப். 18

பல்வேறு தொழில்நுட்பக் கோளாறுகளைச் சந்தித்துள்ள ரஷ்யாவின் ''மிர்'' விண்கலத்துடன் அமெரிக்காவின் விண்கலம் ஒன்று மோதவிருந்த ஆபத்து மயிரிழையில் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

''மிர்'' விண்கலத்துக்கு சுமார் 500 மீற்றர் தூரத்தில் திடீரென வந்த அமெரிக்காவின் விண்கலம் ''மிர்'' கலத்துடன் மோதாமலேயே அதனைக் கடந்து சென்றது.

அமெரிக்காவின் அந்த விண்கலம் அந்நிய நட்டு ஏவுகணைகளை வானிலேயே இனங்கண்டு தடுத்து நிறுத்தும் திறன் கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரச குடும்பம் பற்றிய நூல்

நியூயோர்க், செப். 18

இளவரசி டயானா மரணமடைந்ததைத் தொடர்ந்து அமெரிக்காவில் உள்ள வெளியீட்டகம் ஒன்று பிரிட்டிஷ் அரச குடும்பத்தைப் பற்றிய நூல் ஒன்றை வெளியிடவுள்ளது.

''த ரோயல்ஸ்'' என்ற பெயருடைய 502 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் அரச குடும்பத்தின் பாலியல் உறவுகள், தன்னினச்சேர்க்கை, கேள்விக்குரிய பிறப்புரிமை, உள்வீட்டு கலகங்கள், போதைப் பாவனை, கேவலமான ஆசைகள் போன்ற விடயங்கள் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிட்டி கெலி என்பவர் எழுதிய இந்நூல் எதிர்வரும் 23 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. (ஐ)

## அனுமதியின்றி ரயில்பாதையை ஊழியர்கள் கழற்றி எடுத்தனர்

### ரயில் விபத்துக்கு அதுவே காரணம்

புதுடில்லி, செப். 18

இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் கடந்த சனியன்று 81பயணிகளின் உயிர்களைப் பலி கொண்ட ரயில் விபத்துச் சம்பவம் தொடர்பாக ரயில்வே ஊழியர்கள் இருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்

மேலதிகாரிகளின்முன் அனுமதிபெறாமல் தண்டவாளங்களைப் பழுது பார்ப்பதற்காகக் கழற்றி எடுத்துச் சென்றதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

விபத்துச் சம்பவத்தை அடுத்து தலைமறைவாகிவிட்ட ரயில்வே ஊழியர்கள் 11 பேரை பொலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

இந்தக் கோர ரயில் விபத்துக்கு ஊழியர்களே பொறுப்பு என ரயில்வே அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் தெரிவித்துள்ளார். (ஐ)

## 2 இலங்கை மீனவர்கள் கைது

சென்னை, செப்.18

தூத்துக்குடிக்கு அப்பால் இந்திய கடற்பகுதியில் இயந்திரப் படகு ஒன்றில் வந்த இரு இலங்கை மீனவர்களை நேற்று முன்தினம் அதிகாலை கடலோரக் காவற்படையினர் கைது செய்தனர். இவர்கள் வந்த படகும் பறிமுதல் செய்யப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

டாக்டரின் பாவிப்பிலிருந்த MINOR 1000 HONDA மோட்டார் சைக்கிள் மற்றும் புதிய 90 AMP பற்றரி, கார் ரயர், ரியூப்ஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55, இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். காலை, மாலை வேளையில் தொடர்பு கொள்ளலாம். (49693)

சகல தடுப்பு மருந்துகளும் கொடுக்கப்பட்ட ஒரு மாத கலப்பின பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் 25-9-97 இல் விற்கப்படும். முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்: கே. வி. சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (49689)

### நெற்காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் ஆலங்குழாயில் செல்லினிக் குருந்தன் என்னும் வயல் (32 பரப்பு) விற்பனைக்குண்டு. கோடை காலத்தில் தோட்டப்பயிர் செய்வதற்குகிணறும் உண்டு. மேற்கு எல்லை ஆற்றுவாய்க்கால்; கிழக்கு எல்லை கந்தரோடை ஊரெல்லை தொடர்பு: பொ. சிவச்செந்திநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பிரதான வீதி, பருத்தித் துறை பிரதேச செயலர் அலுவலகம் அருகாமை). (சி/1579)

### திருமண சேவை

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை முன்னிட்டு யோசனையடைந்துள்ள பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்குரியமணமகன், மணமகள் தேவைப்படுவோருக்கு தகுந்த தகுதிக்கேற்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். தொடர்பு: 'கமலக் கண்ணன்' திருமண சேவை, அல்வாய் வடக்கு, அல்வாய். (சி/1572)

## உதவி ஐயர்மார் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற தேவஸ்தானத்திற்கு உதவி ஐயர்மார் இரண்டு பேர் தேவை.

விண்ணப்பங்களை பின் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**உதயன்**
**மே/பா 652**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(49691)

### ADULT CLASSES

வேலை பார்ப்போர், வேலை தேடுவோர், வெளிநாடு செல்லவிருப்போருக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள். ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி (M.L.S. London), 426 (302), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (49685)

### நாடகம்

கொழும்பா? நாடகத்தை 13.9.97 அன்று வானொலியில் கேட்டீர்களா? வானொலி நாடகம் எழுதுவதில் உள்ள நுட்பங்கள் பலவற்றையும் கையாண்டு, அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை அந்த நாடகத்தை எழுதியுள்ளார். அவரது, நாடகம் எழுதுவது எப்படி? நூலை வாசித்தால் நீங்களும் அந்தமாதிரி நாடகங்கள் எழுதலாம். (49983)

## ஆலயங்களின் விரங்கள் சேகரிப்பு

கொழும்புத்துறை, செப். 18 சாவகச்சேரி பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள சரித்திரப்பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களின் முழுமையான விவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இவ் விவரங்களைச் சேகரிப்பதற்காக இப்பகுதியிலுள்ள ஆலயங்களுக்கு படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக இப் பகுதி பிரதேசச் செயலாளர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-30)

## வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்
## கட்டுரைப் போட்டிகள்

எதிர்வரும் ஐப்பசி **03** சர்வதேச நல்லொழுக்க தினத்தினை முன்னிட்டு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் **20 - 09 - 97** சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

சங்கானைக் கோட்டப்பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்:
யா/வட்டு. இந்துக் கல்லூரி [ சித்தன்கேணி ] யிலும்
சண்டிலிப்பாய் கோட்டப்போட்டிகள்:
மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி [ மானிப்பாய் ] யிலும்
உடுவில் கோட்டப் பாடசாலைப் போட்டிகள்:
இணுவில் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

குறிப்பிட்ட நேரத்திற்கு பங்குபற்றும் மாணவர்களை சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்

சிவன்கோயில் வீதி,
சித்தன்கேணி.

[47431]

## முக்கிய அறிவித்தல்

### ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
### 30 - 09 - 1997 இல்
### அங்கத்தவர் இடாப்பை முடுதல்

மேற்படி சங்கத்தின் கிளை ரீதியான அங்கத்தவர் இடாப்பு 30 - 09 - 97 இல் மூடப்பட்டு அதன் அடிப்படையில் உபவிதிக்கமைய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு கிளைத் தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களை கீழ்க் காட்டப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1. சங்க உபவிதிப்படி பங்கு ஒன்றின் பெறுமதி ரூபா 100 ஆகும். ரூபா 100 பங்குப் பெறுமதி உடைவர்களே வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவர்.
2. உறுப்பினர் ஒருவர் சங்கத்தின் அங்கத்தவராகச் சேர்ந்து ஓராண்டு முடிந்த பின்பே வாக்களிக்கவோ, நிர்வாகத்தில் இடம் பெறவோ முடியும்.

**பொ. மாணிக்கசிங்கம்**
செயலாளர்

**க. கனகராசா**
தலைவர்

(49694)

உ

## வடலியடைப்பு புதறாணை அருள்மிகு
## ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான
## நவோத்தர சத (109) கலச சங்காபிஷேக
## மகா கணபதி ஹோம
# விஞ்ஞாபனம்

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களம் மிகு ஈசுர வருடம் புரட்டாதி மாதம் **3ஆம்** நாள் (**19 - 09 - 1997**) வெள்ளிக்கிழமை கிருஸ்ண பட்ச திருதியை திதியும் அஸ்வினி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் விநாயகப் பெருமானுக்கு விசேட கலச சங்காபிஷேகமும், ஹோமமும் நடைபெற திருவருள் கூடியுள்ளது. வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக்கு விக்கினேஸ்வர பூஜையுடன் கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும். அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வந்து எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

### ★ குருமார்கள் விவரம் ★

''பிரதமகுரு : சிவாகம கிரியா ரத்தினம்'' ஈசான சிவாச்சாரியார்
சிவப்பிரம்மஸ்ரீ சிவநித்தியானந்தக் குருக்கள் — சங்கானை

| | | | |
|---|---|---|---|
| சிவப்பிரம்மஸ்ரீ | க. மஹாகணபதீஸ்வரக் குருக்கள் | — | வண்ணை |
| சிவப்பிரம்மஸ்ரீ | சிவ. சோமசுந்தரக் குருக்கள் | — | வில்லூன்றி |
| சிவப்பிரம்மஸ்ரீ | க. பாஸ்கர குருக்கள் | — | வண்ணை |
| சிவப்பிரம்மஸ்ரீ | கு. கந்தரேஸ்வரக் குருக்கள் | — | கொக்குவில் |
| சிவப்பிரம்மஸ்ரீ | ச. சிவகடாட்சக் குருக்கள் | — | தாவடி |
| சிவப்பிரம்மஸ்ரீ | சொ. ரத்தின சபாபதிக் குருக்கள் | — | கொக்குவில் |
| சிவப்பிரம்மஸ்ரீ | எஸ். கேதீஸ்வரக் குருக்கள் | — | ஆனைக்கோட்டை |
| சிவப்பிரம்மஸ்ரீ | கி. நாராயணக் குருக்கள் | — | யாழ்ப்பாணம் |
| சிவப்பிரம்மஸ்ரீ | மு. பாஸ்கர ரவிக் குருக்கள் | — | விசுவத்தனை |

சாதகாசிரியர்கள்:

| | | |
|---|---|---|
| பிரம்மஸ்ரீ நி. நித்தியசிவதாண்டவ சர்மா | — | சங்கானை |
| பிரம்மஸ்ரீ நி. சிவானந்த சர்மா | — | சங்கானை |

### மங்கள வாத்தியம்

| | | |
|---|---|---|
| மீ. கோவிந்தசாமி குழுவினர் | — | வடலியடைப்பு |
| M. P. பாலகிருஸ்ணன்குழுவினர் | — | அளவையூர் |
| V. K. கானமூர்த்தி குழுவினர் | — | இணுவையூர் |
| R. சுந்தரமூர்த்தி குழுவினர் | — | இணுவையூர் |
| N. R. கோவிந்தசாமி புதல்வர்கள் | — | இணுவையூர் |
| N. ஜெயராமன் குழுவினர் | — | வடலியடைப்பு |
| தெட்சணாமூர்த்தி மகன் உதயசங்கர் | — | அளவெட்டி |
| K. சிவகுமார் | — | நாச்சிமார்கோயிலடி |

அன்று மாலை 3-30 மணிக்கு எம்பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எழுந்தருளி வீதி உலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிப்பார்.

அனைவரும் வருக. அவன் அருள்பெறுக.

தண்டிகை அமைப்பு: K **தவராசா - சண்டிலிப்பாய்**

**தேவஸ்தான பரிபாலனசபை**

உபயகாரர்:
**சுப்பிரமணியம் தெய்வேந்திரம் குடும்பமும், சகோதரர்களும்.**

(சி-1581)

## நெஞ்சகலா நினைவலைகள்
## 31 ஆம் நாள் நினைவு



### அமரர் கதிர்காமு முருகேசு
(ஓய்வு பெற்ற காசாளர், இலங்கை வங்கி)

மண்ணிலே: **08—07—1928**
விண்ணிலே: **19—08—1997**

கண்ணதனிற் கண்டாறாக் கடுந்துயரம் பெற்றமக்கள்
மண்ணதிர மாய்கின்ற மனைவி மருமக்களுடன்,
துடித்தழுநற் பேரர்மற்றும் சுற்றம் அயல்கலங்க
விடுத்தனையோ நின்னாவி வெம்பிக் கதறுகிறோம்.
ஆன்ம சாந்திக்கு அரனடி பணிகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

கிளான், துன்னாலை தெற்கு. (சி/1578)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா வைத்தியசாலைதனது முந்திய நிலைக்கு வரவேண்டாமா?

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நோயாளர் சேவைக்கான அத்தியாவசிய பிரிவுகள் பலவும் காலப்போக்கில் அருகிக் கொண்டே வருவது வடக்கு வாழ் மக்களின் துர்ப்பாக்கியமே!

வவுனியாவுக்கு வடக்கே தமிழ் மக்களுக்கென — அமைந்திருக்கும் ஒரே ஒரு பெரிய ஆஸ்பத்திரியும், போதனா வைத்தியசாலையும் இது ஒன்றேயாகும்.

முன்னொரு காலத்தில் மக்களைப் பாதிக்கும் பல தரப்பட்ட வியாதிகளையும் குணமடைய வைக்கும் நிலையில் இயங்கி வந்த இந்த வைத்தியசாலை, கடந்த பத்து வருடங்களாக பாதிப்படைந்த நிலையில், பல அத்தியாவசிய பிரிவுகள் ஸ்தம்பிதமடைந்தோ அல்லது ஸ்தம்பிதமடையும் நிலையிலோ தான் இப்போது ஒரு மாதிரியாக ''இழுத்துப் பறித்து'' இயங்கி வருகிறது!

**செய்தி மடல்**

கடந்த பத்து வருடங்களுக்கு முன் இந்த ஆஸ்பத்திரி பல தரப்பட்ட வைத்திய நிபுணர்களுடனும், போதிய டாக்டர்கள், தாதியர்கள், மற்றும் உதவி வைத்திய சேவை (பராமெடிக்கல்) உத்தியோகத்தர் ஊழியர்களுடனும் நோயாளருக்கு நிறைந்த சேவையாற்றிவந்தது.

நோயாளருக்கு வேண்டிய நேரத்தில் வேண்டியசிகிச்சைகளை அளித்து குணப்படுத்தும் வல்லமை பெற்றதாக நிமிர்ந்து நின்றது.

குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதைத்தொடர்ந்து போதனா வைத்தியசாலையின் சேவை நிலை ஆண்டுக்காண்டு படிப்படியாக நலிவடையத் தொடங்கியது.

இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து, இயல்பு வாழ்க்கை பாதிப்புறத் தொடங்கிய அவ்வேளையில் இந்த வைத்தியசாலையில் இருந்து வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் வெளி மாவட்டங்களுக்கு மாற்றலாகியும், ஓய்வு பெற்றும் சென்றதால் ஏற்பட்ட வெற்றிடங்கள் இடைவெளிகள் நிரப்பப்படாமலே இருந்தன.

வைத்திய நிபுணர்கள் சிலர் மாற்றலாகிச் சென்றதை அடுத்து அவர்களுக்குப் பதிலாக அத்துறை வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்படாமல் சம்பந்தப்பட்ட சிகிச்சைப் பிரிவுகள் மூடப்பட்டே வந்துள்ளன.

உதாரணத்துக்கு இருதய நோய், நரம்பியல், சத்திர சிகிச்சை, முறிவுநெரிவு சிகிச்சைப் பிரிவுகள், வைத்திய நிபுணர்களின் மாற்றங்களுடன், வார்ட்டுகள், கிளினிக்குகள் அறவே மூடப்பட்டன.

## ஸ்தம்பித்த, மூடப்பட்ட பிரிவுகளை இயக்குவதற்கு உடன் உதவிதேவை

இச்சிகிச்சைகளுக்காக மக்கள் கொழும்பு ஆஸ்பத்திரியையே நாடவேண்டிய நிலை அல்லது மரணத்தைச் சந்திக்க வேண்டிய நிலை என்ற இயலாமை நீடிக்கிறது.

### தலைமைப் பீடம் அக்கறை இல்லை

இச்சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆஸ்பத்திரி நிர்வாகம் கொழும்பு தலைமைப்பீடத்துடன்—சுகாதார அமைச்சுடன்—வேண்டிய தொடர்புகளை பலதடவை மேற்கொண்டும் நேரில் நிலைமைகளை விளக்கியும் கூட, அமைச்சின் அக்கறையற்ற செயற்பாட்டினால், எவ்வித நற்பெறுபேறுமின்றி இப்பிரிவுகள் படிப்படியாக மூடப்பட்டு வந்தன.

இவற்றைப் போலவே, உதவி வைத்திய சேவையில் ('பராமெடிக்கல்' சேவையில்) ஆய்வுகூடப்பிரிவு, எக்ஸ்றே பிரிவு, இயன்மருத்துவப்பிரிவு போன்ற உபபிரிவுகளிலும் செயற்பாடுகள், சேவைகள் படிப்படியாக மெலிந்து கொண்டே செல்கின்றன.

ஆய்வுகூடப் பிரிவு முன்னர் ஆய்வுகளை உடனுக்கு உடன் மேற்கொள்ளக் கூடிய வசதிகளுடன், போதிய ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்களுடன் சிரமமின்றிச் செயற்பட்டு வந்தது. 20 தொழில்நுட்பவியலாளர் பணியாற்றி வந்தஆய்வுகூடம் படிப்படியாகக் குறைந்து 10 பேர்களுடன் மாத்திரமே தற்போது இயங்கி வருகிறது. இவர்களில் 8 பேர் ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிபவர்கள். இருவரே நிரந்தர மானவர்கள்.

### நோயாளர் பாதிப்பு

இதனால் வேண்டிய வைத்திய ஆய்வுகளை வேண்டிய நேரத்தில் செய்து கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் தோன்றுகிறது. இத்தகைய பற்றாக்குறைகளால் பாதிக்கப்படுபவர்கள் நோயாளர்களே, மக்களே!

### வெளிநோயாளர் ஆய்வு கூடம்

உள்ளகஆய்வு கூடம், வெளிநோயாளர் பிரிவுக்கென ஒரு ஆய்வு கூடம் என இரண்டு ஆய்வு கூடங்கள் இயங்கி வருகின்றன. வெளிநோயாளர் பிரிவில் தினமும் மூன்று, நான்கு தொழில் நுட்பவியலாளர்கள். கடமை புரிந்து வந்தனர். ஆனால் தற்போது அந் நிலை மாறி, தொழில் நுட்பவியலாளர் பற்றாக்குறையினால் இங்கு ஒருவர் மாத்திரமே பணியாற்றுகிறார்.

வெளிநோயாளர் பிரிவில் தற்போது நோயாளர்களின் வருகை அதிகரித்து வருகிறது. அதனால் பல நோயாளர்கள் தமக்குரிய பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் சிகிச்சையையும் தொடரமுடியாது திரும்பவேண்டிய நிலைப் பாட்டினிலுள்ளனர். ஆய்வு கூடப் பரிசோதனை அறிக்கை பெறுவதற்கு பல தடவைகள் அலைய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

''எக்ஸ்றே'' பிரிவும் மந்த கதியிலேயே இயங்கி வருகிறது. ''எக்ஸ்றே'' பிரிவில் தற்போது மூவர் மாத்திரமே கடமை புரிந்து வருகின்றனர். இங்கும் இருவரே நிரந்தர உத்தியோகத்தர்கள்.

நான்கு பாரிய ''எக்ஸ்றே'' இயந்திரங்களும், ஒரு நடமாடும் ''எக்ஸ்றே'' இயந்திரமும் செயற்பட்டுவந்த இப்பிரிவில் தற்போது இரு இயந்திரங்கள் மட்டுமே செயற்படுகின்றன. ஏனையவை திருத்தமுடியாத நிலையில் கட்டையில் ஏற்றப்பட்டுள்ளன,

இப்பிரிவுக்கென கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் ஜேர்மனியில் இருந்து வாங்கிய ''எக்ஸ்றே'' இயந்திரமும் பொருத்திக்கொள்ள முடியாத நிலையில், பகுதி பகுதியாகப் பெட்டிகளில் அடைக்கப்பட்ட நிலையிலேயே கிடப்பில் உள்ளது.

இதனைப் பொருத்துவதற்கென கொழும்பில் இருந்து வந்த பொறியியலாளர்களும் அதற்குரிய ''கட்லொக்'' இல்லாத காரணத்தால் கொழும்பு திரும்பிவிட்டனர். ''எக்ஸ்றே'' இயந்திரமும் பெட்டிக்குள்ளேயே 'முடங்கி விட்டது.

இத்தகைய காரணங்களால் இரவு பகலாக சேவையாற்றிய 'எக்ஸ்றே' பிரிவில் இரவு நேரவேலை நிறுத்தப்பட்டு விட்டது. பகலிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சேவை நடைபெறுகிறது.

### இயன் மருத்துவ பிரிவில் இருவரே

பதின்னான்கு இயன் மருத்துவர்களுடன் இயங்கிவந்த பிரிவு தற்போது இருவருடன் மாத்திரமே செயற்படுகிறது. பலதரப்பட்ட வைத்திய உபகரணங்களுடன் பெரிய கட்டடமொன்றில் இயங்கிவந்த இந்த இயன் மருத்துவம் தற்போது வேண்டிய உபகரணங்கரி ஒரு சிறிய அறையில் உரிய வசதியற்ற நிலையில் செயற்படுகிறது. இதனால் இங்கும் நோயாளருக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது.

### தொழிற் கூடம் ஸ்தம்பிதம்

இப்போது யாழ். குடாநாட்டில்இயற்கை, செயற்கை விபத்துக்களினால் கை, கால்கள் ஊனமுறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவ்வேளையில் அத்தகையோருக்கு உதவுவதற்கு வசதியாக இயங்கிய தொழிற் கூடம் ஸ்தம்பித்துள்ளது. ஊன்றுகோல், செயற்கைக் கால், ஊனமுற்றவர்களுக்கான சப்பாத்துக்கள், கைக் கிளிப்புகள் என்பன இங்கு தயாரிக்கப்பட்டன.

தொழிற் கூடத்தில் கடமையில்இருந்துவந்த தொழில்நுட்பவியலாளர்கள் ஓய்வு பெற்றும் மாற்றலாகியும் சென்றபின் அவ்விடங்கள் நிரப்பப்படவில்லை. தொழிலாளர் பற்றாக்குறையும் சேர்ந்து அது செயலிழந்து போயிற்று.

381 தாதியர்கள் கடமை புரிந்த இவ்வைத்தியசாலையில் தற்போது 231 தாதியர்களே கடமை புரிந்து வருகின்றனர். 32 குடும்ப நல சேவையாளர்கள் பணிபுரிந்தும் பற்றாக்குறை நிலவியது. ஆனால் இப்போது 8 பேர் மட்டுமே பணிபுரிகின்றனர்.

**கே. கதாகரன்**

யாழ். போதனாவைத்தியசாலையில் இன்னும் பல பிரிவுகள் மேற் கூறியவை போன்றே உரிய பணியாளர்களின்றி நோயாளருக்கு வேண்டிய சேவைகளை தகுந்த முறையில் செய்யமுடியாத குறைபாடுகளுடன் குற்றுயிராக நகர்ந்து கொண்டிருக்கின்றது!

ஸ்தம்பித்துள்ள, மூடப்பட்ட சிகிச்சைப் பிரிவுகள் சீர்செய்யப்பட்டு, போதிய ஆளணியினர் பணிக்கு அமர்த்தப்பட்டால் தான் யாழ். போதனா வைத்தியசாலை முந்திய நிலைக்கு வருவதற்கு எட்டிப்பார்க்க முடியும்.

வைத்திய உபகரணங்கள், புதிய வசதிகள் மட்டும் செய்யப்பட்டால் ஆஸ்பத்திரி இப்போதைய நிலையிலிருந்து மீள எழுந்து நிற்க முடியாது. மக்களுக்குப் பணிபுரியும் மனதுடன் வைத்தியர்கள் மற்றும் விசேட சேவையினர் முன்வர வேண்டும். புதியவர்களைப் பயிற்றுவிப்பதிலும் போதிய அக்கறை செலுத்தப்பட வேண்டும். ★

---

## 2 ஆயிரம் பரல் தார் மாஹோவில் வந்தது

2 ஆயிரத்து 293 மெற்றிக் தொன் பொருள்களை ஏற்றிக் கொண்டு மாஹோ கப்பல் நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை துறை முகத்தை வந்தடைந்தது.

வீ திஅபிவிருத்தி அதிகார சபைக்கு 2 ஆயிரம் தார் பரல்களும், யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு 350மெ. தொன் உரவகைகளும், தனியார் வர்த்தர்களுக்கு உருளைக்கிழங்கு, சிமெந்து போன்ற பொருள்களும் இக் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

பொருள்கள் இறக்கும் பணி உடனடியாக ஆரம்பமாகியது. (ஐ-109)

## உவர்நில நெற் பயிர்ச் செய்கை கோப்பாயில் இம்முறை இல்லை

யாழ்ப்பாணம், செப். 18

கோப்பாயில் இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் காவலரண் காரணமாக உவர் நிலத்திலான நெற்பயிர்ச் செய்கை இம்முறை தடைப்பட்டுள்ளதாக யாழ். விவசாய ஆராய்ச்சி நிலையப் பதில் பொறுப்பதிகாரி எம். செல்வராஜா தெரிவித்தார்.

சுமார் 25 வருடங்களாகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாமல் இருந்த கோப்பாய்ப் பிரதேசத்தில் இந்த உவர்நில நெற்செய்கை அண்மைக்காலத்தில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு அதில் ஓரளவு வெற்றியும் காணப்பட்டது.

மிகுந்த பிரயத்தனத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நெற் பயிர்ச்செய்கையை இம்முறை மேற்கொள்வதற்கு அப்பகுதியில் உள்ள பாதுகாப்புக் கெடுபிடிகள் தடையாக உள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-...)

## 3 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம்

அரியாலை, செப். 18

யாழ். ப. நோ. கூ. சங்கம் தனது பாவனையாளர்களுக்கு அடுத்த கட்ட மண்எண்ணெய் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது. மூன்று லீற்றர் மண்எண்ணெய் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன் மண்எண்ணெயைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-17)

## நூற்றாண்டு மலர் வெளியீடு

நெல்லியடி, செப். 18

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா அடுத்தமாத முற்பகுதியில் நடைபெறவிருக்கின்றது.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஐ-190)

கொழும்புத்துறைப் பகுதியில்

## 230 குடும்பங்களுக்கு ரூ. 5 ஆயிரம் கிடைக்கும்

கொழும்புத்துறை கிராம சேவையாளர் (ஜே - 62) பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவு முதற் கட்டமாக 230 பேருக்கு வழங்கப் படவுள்ளது.

கொழும்புத்துறை வீதியில் உள்ள கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பட்டியலிலுள்ளவர்கள் தமது பங்கீட்டு அட்டை, வங்கிப்புத்தகம், அடையாள அட்டை, ஐந்து ரூபா முத்திரை என்பவற்றுடன் தம்மை அலுவலகத்தில் சந்திக்குமாறு கிராம சேவையாளர் த. தேவராசா தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

## நல்லின பயிர் விதைகள் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். விவசாய ஆராய்ச்சி நிலையம் பாவல், கத்தரி, புடோல் ஆகியவற்றின் நல்ல விதை இனங்களைப் பெற்று விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக விவசாய ஆராய்ச்சி நிலையப் பதில் பொறுப்பதிகாரி எம். செல்வராஜா தெரிவித்தார்.

இதேவேளை — பயிரினங்களில் ஏற்படுகின்ற பூச்சி, நோய்த் தாக்கங்கள் தொடர்பாக விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது வேண்டிய ஆலோசனைகள் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கட்டடம் அமைக்க
# ஜேர்மன் நிறுவனம் உதவி வழங்கும்

## நிறுவன இணைப்பாளர் தெரிவிப்பு

நெல்லியடி, செப். 18

''ஜேர்மன் தொழில் நுட்ப கூட்டுறவு நிறுவனம், யாழ். மாவட்டத்திலே எட்டுப் பாடசாலைகளுக்கு கட்டடங்களை கட்ட முன்வந்துள்ளது. இவற்றின் ஆரம்ப நடவடிக்கையாக வடமராட்சியிலுள்ள ஹாட்லிக் கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டடம் அமைப்பதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது ஹாட்லியின் வரலாற்றில் ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற வைபவமாகும்.'

கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் மூன்று மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்துப் பேசிய ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுறவு நிறுவன இணைப்பாளர் திரு. ஸ்ரீவென் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹாட்லிக் கல்லூரி அதிபர் பொ. வேணுகோபால் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அவர் மேலும் தெரிவித்ததாவது-:

இக் கட்டடம் விரைவில் பூர்த்தியடைய பெற்றோர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் உட்பட அனைவரும் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும்.

வடமராட்சிப் பகுதியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கும் கட்டடங்களை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம் — என்றார்.

வடமராட்சிசிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் எல். விஜயரட்ணா தமது உரையில் கூறியதாவது;-

வடமராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இவ் வேலைத் திட்டம் மிக முக்கியமானதொரு வேலைத் திட்டமாகும். இது மகிழ்ச்சியுடன் கூடிய பெறுமதிமிக்க திட்டமாகும்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வடமராட்சிப் பகுதி கல்வியினால் பெரும் மதிப்பும் புகழும் பெற்றிருக்கின்றது. செல்வாக்கு உள்ளவர்கள் ஆயினும் சரி, செல்வாக்கு இல்லாதவர்கள் என்றாலும் சரிகல்வியைப் பெரும் பொக்கிஷமாக மதிக்கிறார்கள். இக் கல்லூரியில் கற்றவர்கள் உலகம் முழுவதிலும் நல்ல உயர் பதவிகளில் இருக்கின்றார்கள்.

எங்கள் நாடாளுமன்றத்தின் தற்போதய சபாநாயகர் கே. பி. இரத்னாயக்கா அவர்களும் ஹாட்லியிலேயே கல்விகற்றவர். இதே போன்று அரசாங்கத்திலும், வெளியிடங்களிலும் உயர் பதவிகள் வகிப்போர் பலர் ஹாட்லிக் கல்லூரியிலேயே கற்றுள்ளனர். தற்பொழுது இலங்கையில் இக் கல்லூரி முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இம் மூன்று மாடிக் கட்டடத்தைக் கட்டி முடிக்க நடவடிக்கை எடுத்த ஜேர்மன் தொழில் நுட்ப கூட்டுறவு நிறுவனம், யாழ். கல்வித் திணைக்களம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் — என்று தெரிவித்தார். (ஐ 109

# சகோதரர்களின் தகராறு கொலையில் முடிந்தது

## சுன்னாகத்தில் சம்பவம்

இரு சகோதரர்களுக்கு இடையிலான வாய்ச் சண்டை இறுதியில் கொலையில் முடிவடைந்தது.

சுன்னாகத்தைச் சேர்ந்த பொன்னன் கதிரவேலு (வயது 46), பொன்னன் செல்வராஜா ஆகிய இருவருக்கும் இடையிலேயே தகராறு ஏற்பட்டது.

இவர்களின் தகராறு கடந்த ஞாயிற்றுக்கிழமை கைகலப்பாக மாறியது. செல்வராஜாவுடன் வந்த மற்றொரு நபரும் அவரது இரு புதல்வர்களும் கதிரவேலுவை இரும்புக் கம்பி, தடிகள் என்பவற்றால் தாக்கிய தாகக் சந்தேகிக்கப்படுகிறது. காயமடைந்த கதிரவேலு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு திங்கட்கிழமை அங்கு மரணமானார்.

இச்சம்பவத்தில் சந்தேக நபர்களான சிலர் நேற்று பொலீஸாரால் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிபதி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## மாணவர்களுக்கு பணப் பரிசு

யாழ். மாவட்டத்தில் 1995 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளியான 182 புள்ளிகளைப் பெற்ற இருமாணவர்கள் காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையால் பணப் பரிசில்கள் வழங்கிப் பாராட்டப்பட்டனர்.

இராமநாதன் கல்லூரி மாணவனான எஸ். லக்மன், தம்பசிட்டி எம். எம். த. க பாடசாலை மாணவனான பி. செந்தில் ஆகிய இருவருமே தலா 500 ரூபா பரிசுகளைப் பெற்றனர்.

இச்சபை ஒவ்வொரு வருடமும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் மாணவர்கள் அனைவருக்கும் பரிசில்களை வழங்கி வருகின்றது.

இச் சபை இவ்வாண்டு ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கும் பணப் பரிசில்களை வழங்க உள்ளது. (ஐ-9)

## அமோனியம் விநியோகம்

கைதடி கமநல கேந்திர நிலையம் அப்பகுதி விவசாயிகளுக்கு நெற் செய்கைக்குத் தேவையான அடிப்பசளை அமோனியம் சல்பேற்று உரம், விதை நெல் ஆகியவற்றை வழங்கி வருகின்றது.

விவசாயிகள் தத்தமது விவசாய சம்மேளனத்துடன் தொடர்புகொண்டுஇவற்றை பெற்றுக் கொள்ளலாம் என கைதடி பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

## புங்குடுதீவில் வீதி திருத்தம்

புங்குடுதீவு சென் சேவியர் வீதியும், முற்றவெளி வீதியும் தற்போது திருத்தப்பட்டு வருவதாக புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

விலைமதிப்புத் திணைக்களகத்தின்

# ஊழியர்களுக்கு இதுவரை ஊக்குவிப்புப் பணம் இல்லை

விலை மதிப்புத் திணைக்கள யாழ். பிரதேச அலுவலகத்தைச் சேர்ந்த 12 ஊழியர்களுக்கு இதுவரை ஊக்குவிப்புப்பணம் கிடைக்கவில்லை.

கடந்த 1996 ஜூலை மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான ஆறு மாத காலத்துக்கான பணமே இன்னும் கிடைக்கவில்லை. இப்பணத்தைப்பெற இத் திணைக்கள ஊழியர்கள் பல தடவை நேரிலும், கடித மூலமும் கொழும்பில் உள்ள தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டும் இன்று வரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை என ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான திணைக்கள ஊழியர்களுக்கு ஏற்கனவே இப் பணம் வழங்கப்பட்டு விட்டது. (ஐ-30)

# சிறுகதை இலக்கியத்துக்கு புது மெருகூட்டியவர் பெனடிக்ற்

## அஞ்சலிக் கூட்டத்தில் உரை

இலங்கைத் தமிழ் சிறுகதை இலக்கியத்திற்குப் புது மெருகூட்டியவர் பெனடிக்ற் பாலன்.

யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசா இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் காலமான எழுத்தாளர் பெனடிக்ற்பாலனின் நினைவஞ்சலிக்கூட்டம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அதிபர் காரை. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கலாநிதி குணராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெனடிக்ற்பாலனின் முற்போக்கு இலக்குகள் பற்றியும், சிறுகதையின் மூலம் சமூகச் சீர்திருத்தங்களுக்காக அவர் ஆற்றிய சேவைகள் பற்றியும் குணராசா தமது உரையில் குறிப்பிட்டார்.

ஆசிரிய கலாசாலையின் முன்னைநாள் உப அதிபர் க. குகக்குமரராஜா, விரிவுரையாளர் அற்புதராஜா, பெனடிக்ற்பாலனின் பழையமாணவன் விக்கினேஸ்வரன் ஆகியோரும் நினைவுரையாற்றினர். (ஐ-5)

# பொலிகண்டி வாசிகள் இருவர் தஞ்சாவூரில் விபத்தில் பலி!

நெல்லியடி, செப். 18

தமிழ்நாடு தஞ்சாவூரில் கடந்த வாரம் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் பொலிகண்டியைச் சேர்ந்த இரு பெண் சகோதரிகள் உயிரிழந்தனர். அவர்களது உறவினர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

நீண்டகாலம் லண்டனில் வசித்து வந்த இவர்கள் கடந்த வாரம் தங்கள் உறவினர்களைச் சந்திப்பதற்காக சென்னைக்குச் சென்றிருந்த வேளையே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாக இங்கு தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிகண்டி ஆலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இரு பிள்ளைகளின் தாயான விஜயகுமார் இராஜலட்சுமி (வயது 32), ஒருபிள்ளையின் தாயான வனசிங்கம் இராஜேஸ்வரி (வயது 26) ஆகிய இருவருமே இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

இவர்கள் இருவரதும் தாயாரான சுந்தரமூர்த்தி தெய்வானைப்பிள்ளை (வயது 62), இராஜலட்சுமியின் கணவரான வேல்முருகு விஜயகுமார் (வயது 34) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் பயணம் செய்த வான் ஒன்று லொறி ஒன்றுடன் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றதாகத் தகவல் கிடைத்துள்ளது. (ஐ-109)

## செய்திச் சாரம்

### கூ. சங்கத்துக்கு உழவு இயந்திரம்

யாழ்ப்பாணம், செப். 18

புங்குடுதீவு- நயினாதீவு ப. நோ. கூ. சங்கத்திற்கு யாழ். செயலகத்தினால் ஓர் இரண்டு சில்லு உழவு இயந்திரம் (லான்ட் மாஸ்ரர்) வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை வாகன வசதியின்றியிருந்த ப. நோ. கூ. சங்கத்திற்கு இந்த உழவு இயந்திரம் பெரிதும் பயன்மிக்கதாக இருக்கும் என்று பணிப்பாளர் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

### 176 ஆவது அருள் விழா

நெல்லியடி, செப். 18

கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையின் 176 ஆவது நிறைவு ஆண்டு அருள் விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு, கரவெட்டி இடைக்குறிச்சி சிற்றாலய மண்டபத்தில் தோத்திர வழிபாட்டுடன் ஆரம்பமாகும். இவ்விழாவில், வடக்குக் கிழக்கு மறை மாவட்டத் தலைவர் அருட்திரு.எஸ்.எஸ். கருணைராஜ் புதிய மூன்று மாடிக்கட்டடத்தின் அத்திபாரக் கல்லை பிரதிஷ்டை செய்வார். மாலை 3 மணிக்கு இவ் வைபவம் இடம் பெறும். (ஐ-109)

### மல கூடம் அமைக்க நிதி உதவி

திருநெல்வேலி, செப். 18

வலி. தென்மேற்கு பிரதேச சபைப் பிரிவில் இயங்கும் சபையின் முன்பள்ளிகளுக்கு நிரந்தர மலசல கூடம் அமைப்பதற்கு 'யூனிசெவ்' நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டுத்திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

### 6 ஆயிரத்து 654 குழந்தைகளுக்கு சொட்டுமருந்து

திருநெல்வேலி, செப். 18

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இளம்பிள்ளை வாதத்தை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த 6 ஆம் திகதியன்று 6 ஆயிரத்து 654 குழந்தைகளுக்கு 16 நிலையங்களில் வைத்து சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

பயிற்சி பெற்ற சுகாதாரத் தொண்டர்களின் உதவியுடன் குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களினால் இந்த சொட்டு மருந்து வழங்கப்பட்டது. (ஐ-135)

### டாக்டர் நியமனம்

திருநெல்வேலி, செப். 18

வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகத்தின் பொறுப்பதிகாரியாக டாக்டர். எஸ். நடராசா இம் மாதம் தொடக்கம் யாழ். பிராந்திய சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஒரு வருட காலமாக இப்பதவி வெற்றிடமாக இருந்து வந்தது. வட்டுக்கோட்டை, கொட்டைக்காடு கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியே பிற்பகலில் இங்கு வந்து கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-135)

### லியோ கழகம் மூக்குக் கண்ணாடிகள் வழங்கும்

திருநெல்வேலி, செப். 18

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் விழிப்புலன்குறைந்த மாணவிகளுக்கு இலவசமாகக் கண்பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்கு கல்லூரி லியோ கழகம் தீர்மானித்துள்ளது. இதற்கு நிதி சேகரிப்பதற்காக அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்றும் நடத்தப்படவுள்ளது. (ஐ-135)

### ச. ச. நிலைய உதவிப் பணம்

வலி. தென்மேற்கு பிரதேச சபைப் பகுதியில் இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு கடந்த 1996 ஆம் வருடத்திற்கான உதவி நன்கொடைப் பணம் தற்போது மானிப்பாயிலுள்ள பிரதேச சபையின் தலைமைஅலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பிரிவில் 67 பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் உள்ள போதிலும் 16 சனசமூக நிலையங்களே உதவி நன்கொடை கேட்டு விண்ணப்பித்துள்ளன. ஏனைய சனசமூக நிலையங்களும் தங்கள் ஆவணங்களைச் சமர்ப்பித்து இந்தநன்கொடையைப் பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-152)

### வீதி திருத்தம்

சண்டிலிப்பாய், செப். 18

வலி-தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் சண்டிலிப்பாய் பேக்கறி ஒழுங்கை வீதி, வலி- தென்மேற்கு பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தினால் 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

### ஓட்டுமடம் கிளை திறக்கப்பட்டது

அரியாலை, செப். 18

யாழ் ப. நோ. கூ. சங்கத்தின் ஓட்டுமடம் கிளை (கிளை இலக்கம்-4) மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இக் கிளையூடான உணவுப் பொருள் விநியோகம் கடந்த வாரம் முதல் ஆரம்பமாகியுள்ளது. (ஐ-17)

### ச. ச. நிலையம் புனரமைப்பு

அரியாலை, செப். 18

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. நிலையத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதியை யாழ். பிரதேச செயலகம் ஒதுக்கியுள்ளது. (ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விளையாட்டு விடயமா?

காணி, விவசாய அமைச்சர் டி. எம். ஜயரத்னா ஆளுங் கட்சியான பொது மக்கள்ஐக்கிய முன்னணியின் செயலாளர். அமைச்சரவையில் மூத்த அமைச்சர்களில் ஒருவர். அரசின் முன்னணிப் பிரமுகர்களில் ஒருவர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நெருக்கமான குழுவினரில் ஒருவராகக் கருதப் படுபவர்அரசாங்கம் மேற்கொள்ளும் முக்கிய முடிவுகளின் பங்காளியாக விளங்குபவர் என்று கூறினும் மிகையாகாது.

கடந்த வாரம் அவர் நாடாளு மன்றத்தில் ஆற்றிய உரை தமிழ் மக்களின் கவனத்தை ஈர்க்காமல் இருந்திருக்க முடியாது.

வன்னியில் மேற்கொள்ளப் பட்டுள்ள இராணுவ நடவடிக்கையை நிறுத்தி, ஆயுதங்களைக் கீழே போடுமாறு, எதிர்க்கட்சித் தலைவர் உத்தியோகபூர்வமாகக் கேட்டுக் கொண்டால், அரசாங்கம் அதனை நிறுத்தத் தயாராக உள்ளது — என்று அமைச்சர் கூறியிருக்கிறார்.

அமைச்சரின் இந்தக் கூற்று சிறுபிள்ளைத் தனமானதா, கேலிக்குரியதா, விசமத்தனமானதா அல்லது மூன்றும் கலந்ததா என்று திட்டவட்டமாகச் சொல்லமுடியவில்லை!

தமிழர் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணப் போவதாக மக்களுக்கு தேர்தல் வாக்குறுதி அளித்தே இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது. ஆனால் இப்போது போரை நடத்துகிறது. தான் நிலைமாறியதற்காக சமாதானத்துக்கான போர் என்று யுத்தத்தை வர்ணிக்கவும் செய்கிறது.

ஆனால் அமைச்சர் ஜயரத்தினாவின் பேச்சு, ஐக்கிய தேசியக்கட்சி விரும்புவதாலேயே அரசு போர் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதான கருத்தினைத் தொனிக்கிறது. அல்லது போர் நடத்தாவிடில் அரசினை ஐ. தே. கட்சி குறை கூறும் என்ற ''பயத்தினாலேயே'' அவ்வாறு செய்வதாகவும் கொள்ளலாம்.

ஐக்கிய முன்னணி அரசு புதிய சட்டங்களைக் கொண்டு வரும் போதும், புதிய நிர்வாக விதிமுறைகளை வகுக்கும் போதும் ஐக்கிய தேசியக் கட்சியைக் கலந்தாலோசித்துச் செய்வதில்லையே!

சட்ட வரைபுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து தனது வாக்குப் பலத்தினால் நிறைவேற்றி விடுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து வாக்களித்த பல சட்டங்கள் நிறைவேற்றப் பட்டு நடைமுறைக்கும் வந்துள்ளன.

அப்படியிருக்கையில், போரை நிறுத்துவதற்கு மட்டும் பிரதான எதிர்க்கட்சியின் ஆதரவு தேவைப்படுவது ஏன்? சமாதான வழியில் உண்மையான விருப்பம் இருந்தால் அரசு தானாகவே போரை நிறுத்தலாம். அதற்கான சகல அதிகாரங்களும் அரசிடம் உண்டு.

ஐக்கிய தேசியக் கட்சியை இது விடயத்தில் அரசு துணைக்கு அழைப்பது அவசியமற்றது; அர்த்தமற்றது. இதனை அரசியல் விளையாட்டுத் தனம் என்று வகைப் படுத்தாமல் வேறு என்னவென்பது?

போரினால் தமிழ் மக்கள் படும் இன்னல்களை இம்மியளவும் உணராமல், பொறுப்பற்ற முறையில் அதனை விளையாட்டுக்குரிய விடயமாகக் கணக்கில் எடுத்து அரசியல் நடத்துவது, ஆட்சி நடத்துவது எந்த வகையிலும் பொருத்தமாகாது.

தென்னிலங்கை அரசியல் இதே பாணியில் தொடர்ந்தால், 21 ஆம் நூற்றாண்டிலும் இலங்கையில் சமாதானம், அமைதி ஆகியன தலைநீட்டியும் பார்க்கமாட்டா!

## 4 பிரதேச செயலர் பிரிவுகளில்
# மீளக் குடியமர்ந்தோருக்கு உதவுவதற்கு விசேட திட்டம்

யாழ்ப்பாணம், செப். 18

வலி — வடக்கு உட்பட நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ள மக்களுக்கு உதவ விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

வலி — வடக்கு, உடுவில். சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர்கள் பிரிவுகளில் மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

மீளக்குடியமரும் மக்கள் தமது வதிவிடங்களைப் புனரமைக்கத் தேவையான கட்டடப் பொருள்களை வழங்கும் விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த மீளக் குடியமர்ந்தவர்களிடம் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விவரங்களைப் பெறுவதற்காக யாழ். செயலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள விசேட படிவத்தைப் பிரதேச செயலர்களிடம் பெற்று இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் மீள ஒப்படைக்குமாறு யாழ். செயலகம் கேட்டுள்ளது.

# சேதமதிப்பீடு மற்றும் புனரமைப்பு பணிகளில் முஸ்லிம் குழுவினர்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணம் வந்துள்ள முஸ்லிம் குழுவினர் யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் மேற்கொள்ளக் கூடியபுனரமைப்பு வேலைகள் குறித்து ஆராய்ந்து வருகிறார்கள்.

வர்த்தகர் எஸ். ஏ. சி. மொபீன், யாழ்ப்பாணம் மாநகரசபை முன்னாள் உதவி மேயர் எம். ஜி. பஷீர், பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவர் அக்பர் ஹாஜியார், பள்ளிவாசல் பரிபாலன சபை பொக்கிஷாதிபர் எம். ஓ. சுல்தான், பள்ளிவாசல் பரிபாலனசபை செயலாளர் ஏ. எஸ். எம். ராஸீக்ஹாஜியார், யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர் கே. எம். எஸ். ஹமீட், போக்குவரத்து சங்கத் தலைவர் சியானாஸ் தாகீர் ஆகியோர் உட்பட 24 பேர் இக்குழுவில் அடங்கி உள்ளனர்.

இக்குழுவினர் யாழ். முஸ்லிம் வட்டாரப் பகுதியைப் புனரமைப்புச் செய்வதற்கான முதற் கட்டமாக இது சம்பந்தமான உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளனர்.

தற்போது பள்ளிவாசல் மற்றும் கடைகள் ஆகியவற்றைப் புனரமைக்கும் வேலைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதற்கமைய யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் புனரமைப்பு வேலைகள் ஓரளவு பூர்த்தி அடைந்திருப்பதுடன் அங்கு தொழுகையும் நடத்தப்படுகிறது. (இ-15)

# மிதிவெடி ஆபத்துக் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், செப். 18

மிதிவெடிகள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை யுனிசெவ் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தி வருகிறது.

மிதி வெடிகளினால் கூடுதலாக மக்கள் பாதிக்கப்படுவதையடுத்து அவற்றில் இருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அந்த அமைப்பு விசேட திட்டம் ஒன்றை யாழ். செயலகம், யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உதவியுடன் நடைமுறைப்படுத்துகிறது,

பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், அரச சார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு மிதிவெடியில் இருந்து தப்புவதற்கான வழி முறைகள் பற்றி பயிற்சி அளித்தல்—

மிதிவெடிகளில் இருந்து பாதுகாப்பைத் தேடுவதற்கான வழி முறைகள் தொடர்பான சுவரொட்டிகளை பகிரங்கப்படுத்தல்—

மிதிவெடிகள் உள்ள பகுதிகளில் நடமாட வேண்டாம் என்ற விளம்பரப்பலகைகளை வைத்தல்— போன்ற செயற்பாடுகளை அந்த அமைப்பு நடைமுறைப்படுத்தவிருக்கிறது. (இ-3)

# அரச அதிபர் நெடுந்தீவு விஜயம்

நெடுந்தீவு, செப். 18

யாழ். அரசாங்க அதிபர் எஸ். சண்முகநாதன் கடந்த திங்கட்கிழமை உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நெடுந்தீவு சென்றார்.

அங்கு விவசாயிகளுடன் விவசாய அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடியதுடன் செயற்படுத்தப் பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டார். மீனவர்கள் மற்றும் பொதுமக்களின் அத்தியாவசிய பிரச்சினைகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் ஆகியோருடன் அரச அதிபர் நெடுந்தீவின் பல பகுதிகளுக்கும் சென்றார். (இ-5-111)

# பாலர் பாடசாலைகளை திருத்த யுனிசெவ் உதவி

தென்மராட்சி, செப். 18

யுனிசெப் நிறுவனத்தினரால் மிருசுவில் தவசிகுளம், கைதடி மத்தி ஆகிய பகுதிகளில் உள்ள பாலர் பாடசாலைக் கட்டிடங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதுடன் இப் பாடசாலைகளில் அமைக்கப்பட்ட மலசூட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாக பிரதேச செயலக வேலைகள் முன்னேற்ற அறிக்கைப் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தொண்டர் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம் பற்றி இந்த அறிக்கைப் பலகை மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் மேற்கொள்ளப்பட்ட மறவன்புலோ சின்னத்தூவில்குளம், எருக்கலம் குளம் ஆகியவற்றின் வேலைகள் 73 சதவீதம் பூர்த்தியடைந்துள்ளன.

இக் குளங்கள் 5 இலட்சத்து 98 ஆயிரத்து 750 ரூபா செலவில் திருத்தியமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-117)

# திருட்டுச் சம்பவங்களை தடுக்க புளொட் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். குடாநாட்டில் தினமும் அதிகரித்துவரும் திருட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரைக் கடித மூலம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா பொலீஸ் அத்தியட்சருக்கு அனுப்பிய கடிதத்தில் ''நகரில் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் பகலில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. அப்பகுதிகளில் பொலீஸாரின் சுண்காணிப்பை அதிகரிப்பதுடன் கிராம மட்டத்தில் விழிப்புக் குழுக்களையும் ஏற்படுத்தி இச்சம்பவங்களைக் கட்டுப்படுத்தவேண்டும். இந்தத் திருட்டுச்சம்பவங்களை நிறுத்தாவிட்டால் எதிர்காலத்தில் பாரிய குற்றங்கள் ஏற்படவழி ஏற்படும்'' என்று தெரிவித்துள்ளார். (இ-3)

# சமய சந்நிதியில்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு ஆசிரியர் வி. கே. பாலசிங்கத்தின் பக்திப் பாடல்கள் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

வடலியடைப்பு— புதறானை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகாகணபதி ஹோமம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பிற்பகல் விநாயகர் வீதி வலம் வருவார். (ஐ-28)

★ ★ ★

நாரந்தனை சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை யாத்திரை ஸ்தல திருவிழா எதிர் வரும் சனிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் கூட்டுத் திருப் பலியாக நடைபெறும்.

திருவிழாவை முன்னிட்டு யாழ். பஸ் நிலையத்திலிருந்து விசேட பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நாரந்தனை பங்குத் தந்தை தெரிவித்துள்ளார். (ஐ-4)

## நாளை
### புரட்டாதி 3

வெள்ளிக்கிழமை

திதி: திருதியை முன் இரவு 6.26 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி பின் இரவு 2.50 வரை.

சுபநேரம்: 6.03-7.33

ராகுகாலம்: 10.33-12.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# புங்குடுதீவில் சூட்டுக்கு இருவர் பலி!

யாழ்ப்பாணம், செப். 18

புங்குடுதீவுப் பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது பெருங்காடு சந்தியில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்களின் சடலங்களை இராணுவத்தினர் எடுத்துச் சென்றதுடன் வர்த்தகர் ஒருவரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவந்தது. (இ-103)

# முன்பள்ளி கருத்தரங்கு

மானிப்பாய், செப். 18

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாக நடத்தப் பட இருக்கும் முன்பள்ளிகளுக்கான கருத்தரங்கு எதிர் வரும் 19 ஆம், 20ஆம் திகதிகளில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் காலை 8.30க்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.30 மணி வரை நடைபெறும்.

சண்டிலிப்பாய்க் கோட்டத்திற்கு உட்பட்ட சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-90)

## சாயி சிந்தனை

உன்னை, உன் வாழ்க்கையை முழுதாக இறைவனுக்கு அர்ப்பணித்துவிடு. அப்போது உன் பக்தி உன்னைப் பரிபாகம் செய்து அடியோடு மாற்றிவிடும். நீயும் இறைவனும் ஒன்றாவீர்கள்! அவன் நினைப்பது, உணர்வது, செய்வது எல்லாம் உனதாகவும், நீ நினைப்பது, உணர்வது, செய்வது எல்லாம் அவனதாகவும் ஆகும். பாறாங்கல் ஒன்று சிற்பியின் கைவண்ணத்தால் சிலையின் வடிவம் பெற்று பரம்பரை பரம்பரையாக பக்தி சிரத்தையுள்ளவர்களால் வணங்கத் தகுவதுபோல, நீயும் பண்பட்டுப் பதமடைவாய்.

இச்செயல் முறை மாற்றத்தின் போது சம்மட்டி அடிகள் பலவற்றையும் உளியால் விளையும் காயங்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டி வரும். அவனே சிற்பி! கல்லான தன்மையிலிருந்து உன்னை விடுவிக்கின்றான் இதயத்தை அவனுக்குக் காணிக்கையாக்கு! உன்னுடையதாயுள்ள மீதியெல்லாம் அவன் திருக்கரங்களினால் புடம் போடப்படட்டும். அற்ப நோக்கங்களுக்காக வாய்த்த வாழ்க்கை, நேரம், உடற்கோசம் இவற்றின் புனிதத்தைக் கெடுக்காதே, நீ பிறந்தபோது ஆரம்பித்த நெடும் பயண யாத்திரை நீ இறக்கும் போதும் முடிவுறாததாய்ப் போகலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தத் தலத்துக்கு யாத்திரை வந்ததும் அந்த நெடிய யாத்திரையின் ஒரு பகுதியே இந்த உண்மையை மறக்கவேண்டாம். யாத்திரிகர்களுக்கு வேண்டியதான தூய்மை, விழிப்பு, அடக்கம் ஆகிய பண்புகளைக் கடைப்பிடிக்கவும் கண்ணால் காணும் நல்லனவற்றையும் செவியுறும் உண்மையின் உட்தத்துவங்களையும் பொக்கிஷமாக மதித்து, மேற்கொண்டு தொடரும் வாழ்க்கைப் பயணத்துக்கு உற்ற பற்றுக்கோடுகளாகவும், அறிவுறுத்தல்களாகவும் கொள்வாயாக!

(ஆதாரம்: Sathya Sai Speaks- Vol. VI.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வீதியின் இரு மருங்கிலும்

# உயரம் குறைந்த நெல் இனங்களை பயிரிடுமாறுபடையினர் ஆலோசனை

தென்மராட்சி, செப். 18

சாவகச்சேரியில் இருந்து தனங்களப்பு ஊடாக நாவற்குளி வரையிலான வீதியின் இரு மருங்கிலும் உள்ள வயல்களில் நெல் பயிரிட விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் உயரம் குறைந்த நெல் இனங்களைப் பயிரிடுமாறு விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதியின் இரு மருங்கிலும் உள்ள வயல்களில் 50 மீற்றர் தூரத்துக்கு நெற் செய்கைக்குத் தடைவிதிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட சுமார் நூறு ஏக்கர் நெல் வயல்களைச் சேர்ந்த கமக்காரர்கள் தத்தமது பகுதி விவசாயிகள் சம்மேளனங்கள் ஊடாக தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையுடன் தொடர்பு கொண்டனர்.

பிரதேச செயலர், படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்து முன்னர் விதிக்கப்பட்ட தடை உத்தரவு வாபஸ் பெறப்பட்டது.

எனினும் இவ் வயல்களில் 50 மீற்றர் தூரம் வரை உயரம் குறைந்த நெல் இனங்களை விதைக்க வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## இரத்த பரிசோதனை அறிக்கை கிடைப்பதில் தாமதம்

தென்மராட்சி, செப். 18

காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு வரணி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரின் இரத்தப் பரிசோதனை அறிக்கை கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தினால் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் முன்னெச்சரிக்கையாக மலேரியாக் காய்ச்சலுக்குப் பயன்படுத்தும் குளோரோகுயின், பிரீமாக்குயின் போன்ற மாத்திரைகளைப் பாவிக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் இரத்தம் பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கே அனுப்பி வைக்கப்படுகிறது. (இ-117)

## பளைப் பகுதி விசேட அ. அட்டை

தென்மராட்சி, செப். 18

பளைப்பிரதேசத்தில் பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள முகமாலை, இத்தாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பளைப் பிரதேச செயலகத்தில் வழங்கப்படுமென முகமாலை, இத்தாவில் பிரிவு கிராம அலுவலர்கள் அறிவித்துள்ளனர். (இ-117)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

கொழும்புத்துறை, செப். 18

இந்து சமயப் பேரவையால் நடத்தப்படவுள்ள சமய அறிவுப் போட்டி மற்றும் திருக்குறள் மனனப்போட்டிகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பும் இறுதித் தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்து அறநெறிப் பாடசாலைகள் இயங்காத இடங்களைச் சேர்ந்த மாணவ மாணவியரும் இப் போட்டிகளில் பங்குபற்ற வசதியாகவே இத் திகதி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டிருப்பதை அடுத்து நாளை நடைபெறவிருந்த சமய அறிவுப்போட்டி எழுத்துப் பரீட்சை அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கும் —

திருக்குறள் மனனப் போட்டி அடுத்த மாதம் 18 ஆம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-30)

## பட்டாஸ் தொழிற்சாலை வெடிவிபத்து

கொழும்பு, செப். 18

நீர்கொழும்பு, கிம்புலாபிட்டிய பகுதியில் பட்டாஸ் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

இறந்தவரின் கால் ஒன்று சம்பவ இடத்தில் இருந்து நூறு யார் தூரத்தில் வீசப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக நீர்கொழும்புப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ-3-6)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பி. ப. 2.15 மணி — மூன்றாம் பிரிவில் மூன்றாம் இடத்துக்கான போட்டி — யாழ். மத்திய கல்லூரி எதிர் புனித மரியாள் வித்தியாலயம்.

★ பி. ப. 3.00 மணி — இரண்டாம் பிரிவில் மூன்றாம் இடத்துக்கான போட்டி — புனித சாள்ஸ் ம. வி. எதிர் யாழ். மத்திய கல்லூரி.

★ பி. ப. 4.00 மணி — முதலாம் பிரிவில் இறுதிப் போட்டி — வைத்தீஸ்வரா கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி. (இ-3)

## மழை மண் சரிவுக்கு 10 பேர் பலி

கொழும்பு, செப். 18

கடந்த இரு தினங்களாக நாட்டின் பல பாகங்களிலும் பெய்த இடைவிடாத மழையினாலும் மண்சரிவினாலும் வெள்ளப்பெருக்கினாலும் பத்துப்பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

இறந்தோரின் இறுதிக் கிரியைகளுக்காக தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுமென்று சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளர் எம். கே. செட்டியாராட்சி தெரிவித்தார். (இ-9)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்)

கைதானோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற சமயம் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாளை காலை 7-00 மணி முதல் மாலை 6-00 மணி வரை இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்றும்—

இந்தப் போராட்டத்துக்கு பதில் கிடைக்காது விட்டால் பின்னர் யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும்— 'அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

காணாமல் போனோர் தொடர்பாக எமது அமைப்பு ஜனாதிபதியைச் சந்தித்து எமது நிலையை எடுத்துக்கூற சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையைப் பிரதானமாகக் கொண்டே இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அடையாள உண்ணாவிரதம் நடைபெறும் அதே நேரத்தில் ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜரின் பிரதிகள் யாழ். அரச அதிபர், 51 ஆவது படையணி கட்டளைத் தளபதி, யாழ். ஆயர் ஆகியோரிடம் கையளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், சர்வதேச மனித உரிமைகள் இயக்கம் போன்ற சர்வதேச அமைப்புக்களுக்கும் மகஜர்கள் கையளிக்கப்படவிருக்கின்றன. (இ-3-4-15)

முகமாலை

புனித ஆரோக்கிய அன்னை திருவிழா

21 - 09 - 1997

20 - 09 - 97 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நற்கருணை விழா வழிபாடுகள் ஆரம்பமாகும்.

21 - 09 - 97 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலியும், தொடர்ந்து திருச்சுரூபப் பவனியும் நடைபெறும்.

சனிக்கிழமையன்று மாலை யாழ்ப்பாணத்திலிருந்து போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

(49695) பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

## திருமலையில் படை நடவடிக்கை

வவுனியா, செப். 18

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் எப்பகுதியில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது குறித்தோ, நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்தோ இச் செய்தி எழுதப்படும் வரை தகவல் எதுவும் வெளியாகவில்லை. (இ-164-3)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

மாற்றக் கூடாது. ஆனால் உலகில் எங்கும் இல்லாத ஒரு விசேட சமஷ்டி ஆட்சிமுறைக்கு மாற்ற முடியும் என்றும் ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைமையகத்தில் மகாசங்கத்தினருக்கு இந்த அறிக்கை நேற்றுப் பிற்பகலில் தேசிய கூட்டுக்குழுவின் தலைவர் ஆர். எஸ். வனசுந்தரவினால் கையளிக்கப்பட்டது.

இந்த வைபவத்துக்கு மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய ரம்புக்கல்ல ஸ்ரீவிபாணி தேரர் தலைமை வகித்தார்.

## பாலம் திருத்தப்படும்

தென்மராட்சி, செப். 18

நாவற்குழி கேரதீவு வீதியில் உடைந்து விழும் நிலையில் காணப்பட்ட நாவளை வாய்க்கால் பாலம் விரைவில் திருத்தப்படவுள்ளது. (இ-117

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த சந்தை அமைக்கப்பட்டது.

மூன்று இனங்களையும் சேர்ந்த வியாபாரிகளுக்கும் விகிதாசாரப்படியே இடம் வழங்கப்படும். உரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டு உரிய முறைப்படி இடம் வழங்கப்படும்.

தற்சமயம் சந்தையில் சமயக் கிரியைகளே நடந்தன. சந்தையின் வேலைகள் முழுமையாக முடியவில்லை. அதற்கு இன்னும் 3 அல்லது 4 மாதங்கள் செல்லும். ஆகவே சந்தைப் பகுதியில் உள்ள பொலீஸ் காவலை விலக்க வேண்டும்'' இப்படி அவர் கூறினார்.

''சந்தைப் பகுதியில் இருந்து பொலீஸ் வாபஸ் பெறப்பட்டால் அக்கட்டடம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு விடுமே'' என்று பாதுகாப்புத் தரப்பில் கூறப்பட்டது.

''அப்படி எதுவும் நடக்க மாட்டாது'' என்று உத்தரவாதம் தருவதாக சூரியமூர்த்தி தெரிவித்ததையடுத்து பொலீஸ் வாபஸ் பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கட்டட வேலைகளை தொடரவும் பாதுகாப்பு தரப்பால் அனுமதி வழங்கப்பட்டது. (இ-21-3)

## இரத்மலானை...

(முதலாம் பக்கத் தொடர்)

கைப்பற்றி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்தளத்தை உளவு பார்க்க வந்ததாகச் சந்தேகத்தின் பேரில் விமானப் படையினரால் சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள் கொடுத்த தகவலையடுத்தே மேற்படி வீட்டில் தேடுதல் நடத்தப்பட்டது.

சிங்களப் பெண்மணி ஒருவரிடம் இருந்து இந்த வீட்டை 3 வருடத்துக்கு முன்னர் இந்த இளைஞர்கள் வாடகைக்குப் பெற்றனர் என்றும்—

விமானத்தளத்தை இம்மாத ஆரம்பத்தில் தாக்க திட்டமிடப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது என்றும்—

இத்தாக்குதலில் பங்குபற்ற கொழும்பு வந்திருந்த மேலும் எட்டுப்பேர் கொழும்பில் பல இடங்களில் தங்கியிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது என்றும் — பொலீஸார் தெரிவித்தனர்.

இதே நேரம் — பொலீஸார் தேடுதல் நடத்திய சமயம் அப்பகுதியில் நடமாடிய ஒரு சிங்கள நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் பகுதியில் கடமையாற்றும் பொலீஸ் கான்ஸ்டபிள் என்று அவர் தம்மைத் தெரிவித்த போதும், அவர் மீது சந்தேகம் கொண்டு பொலீஸார் அவரைக்கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட பொருள்கள் பொலீஸ் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்றுப் பார்வையிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-21-3)

## தரைவழிப் பாதை...

(முதலாம் பக்கத் தொடர்)

மூன்று வருடங்களுக்கு முன்னர் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றவுடன் ஜனநாயக நிறுவனங்களை உறுதிப்படுத்தி மனித உரிமைகளையும் பேணுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

இதே காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளமாக விளங்கிய யாழ்ப்பாணக் குடாநாட்டை மீட்பதிலும் எமது அரசாங்கம் வெற்றி கண்டது.

மலேசிய முதலீட்டாளர்கள் இலங்கையில் 100 கோடி ரூபா முதலீடு செய்ய முன் வந்துள்ளனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீளக்கட்டியெழுப்ப இது உதவும்— இப்படி ஜனாதிபதி மேலும் கூறினார். (இ-3)

## நெடுங்கேணியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

இவ்விரு மாணவர்களும் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர்களை பிணையில் எடுக்க உறவினர்களால் அனுப்பப்பட்ட இருவர் நீதிமன்றத்தில் பிரசன்னமானார்கள்.

பிணை எடுக்கவந்த அந்த இருவரையும் தெரியுமா என நீதிவான் இரு மாணவர்களிடமும் கேட்டார்.

அவர்களைத் தெரியாது என்று மாணவர்கள் பதில் அளித்தனர். இதனை அடுத்து பிணைஎடுக்க வந்த அந்த இருவரையும் கைதுசெய்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட மாணவர்களின் உறவினர் இது தொடர்பாக இலங்கை செஞ்சிலுவைச்சங்க வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பாளர் சிவநாதன் கிஷோரிடம் முறையிட்டனர்.

இதைத் தொடர்ந்து அவர் அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு நேற்றுச் சென்று நீதிவானிடம் விவரத்தைத் தெரிவித்து மாணவர்களையும் பிணை எடுக்கச் சென்றவர்களையும் விடுவித்து வவுனியாவிற்கு அழைத்து வந்து உறவினர்களிடம் ஒப்படைத்தார். (இ-164-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org